முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 563**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.04.2021, புதன்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா போற்றி
ஞான சித்தியே அரசா போற்றி
வானவர்கள் போற்றும் மாதர்மத்தை
வள்ளலாக வையகத்தில் வழங்கும் அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கன் உன் தர்மமே
அகிலத்தை ஆளும் கலி இடரிலிருந்து மீட்கும்
3. மீட்கின்ற மகா சூட்சும சக்திகளை
மேலான சன்மார்க்க வழி கொண்டு வழிநடத்தும்
ஆற்றல்மிக்க அரங்கன் நீயே கலியின் சிறந்த குரு
ஆறுமுகன் என் துணைபட இயங்கி வருவதாலே
4. வருகின்ற உன் தொண்டர் படைகள் மூலமாகத்தான்
வையகத்தில் மாற்றம் நிகழும்
தருகின்ற உன் தர்மத்தின் மூலமாகத்தான்
தரணியில் பேரிடரிலிருந்து பாதுகாப்பு உண்டாகும்
5. ஆகவே அரங்கனே கலியின் சிறந்த யோகி
அரங்கன் தொண்டர்களே சிறந்த ஞானவான்களாகும்
தடையற அரங்கன் வழி இன்னும் உலகோர்
தொடர்ந்து வர தரணியே தர்மலோகமாகி
6. ஆகியே அரங்கன் ஞானபலம் கொண்டு  அகிலமே மிகுந்த பாதுகாப்பு பெறும்
மகிழவே மக்களுக்கு அமைதி நிறைந்த வாழ்வாகவும்
மன்னர்களும் இனிதே ஞானிகள் ஆசிபெற்றவர்களாகவும்
ஆகவுமே மாறி இந்த கலியுகம் அமைந்திடும் ஞான ஆட்சிக்காலமாக
7. காலமாக்கி சுப்ரமணியப்பெருமான் யானும்
கருணைக்கொண்டு அரங்கன் கரம்பட தீட்சையாக
ஞானமாக மக்களிடை இறங்கி
ஞான யுகமாற்றம் இனிதே செய்தருள்வேன்

8. அருளவே அரங்கனிடம் ஆற்றல்கூட்டி
ஆறுமுகன் அனுதினமும் அற்புதம் நிகழ்த்த
வரங்கள் பெற வாரீர் வாரீர் அரங்கன் வாழும்
வல்லமையான ஓங்காரக்குடிலுக்கு

9. ஓங்காரக்குடில் தொடர்பு உலகலாவிய வண்ணம் பரவ
ஓங்கார ஞானம் உலகமெங்கும் பரவி
ஓங்காரன் என் ஞானஆட்சி உயர்வாக
ஓங்கார ஞானி வழியாக

10. வழிவழி வருகின்ற வள்ளல் தர்மவான்கள்
வல்லமை கூட்டுகின்ற ஞானவான்கள்
வழிமொழிந்து அவர்கள் மூலமாக
வையகம் ஞான ஆட்சிதனை பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.